# நடப்பு நிகழ்வுகள்- ஜூன் 25 - 2017

- கனடா உச்சநீதிமன்றத்தில் இந்திய வம்சாவளியைச் சார்ந்த ‘‘முதல் சீக்கிய பெண் பல்வந்தர் கவுர் ஷெர்சில்’’ நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

- மகாராஷ்டிராவில் விவசாய கடனைத் தள்ளுபடி செய்வதாக அந்த மாநில முதல்வர் தேவேந்திர ஃபட்டவீஸ் அறிவித்தார். மொத்தம் ரூ 34020 கோடி விவசாய கடனை தள்ளுபடி செய்ய வகை செய்யும் மகா திட்டத்திற்கு மாமன்னர் ‘‘சிவாஜி மகராஜின்’’ பெயர் சூட்டப்பட்டுள்ளது.

- மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவி திட்டத்தின் கீழ் திருமண நிதி உதவித் தொகை ரூ25 ஆயிரம் , ரூ50 ஆயிரத்துடன் 8 கிராம் தாலிக்கு தங்க நாணயம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் இனி இலங்கை தமிழ் பெண்களுக்கும் வழங்கப்படும் என்று சமூக நலத் துறை அமைச்சர் வி.சரோஜா (23.06.17) அன்று அறிவித்தார்.

- ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் நடைபெற்ற ஆஸ்திரேலிய பாட்மிண்டன் ஓபன் போட்டித் தொடரில் இந்தியாவின் ஸ்ரீகாந்த் சீனாவின் சென்லாங்கை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றார்.

- மங்கோலியா நாட்டின் தலைநகர் உலான்பாதரில் குத்துச்சண்டை போட்டி நடைபெற்றது. இதில் இந்திய வீரர் அன்புஷ் தாஹியா 60 கிலோ எடைப்பிரிவில் கொரியாவின் சோய்சோல் - ஐ வீழ்த்தி தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

- மத்திய பிரதேசத்தின் அமைச்சர் நரட்டோம் மிஷ்ரா இவர் தாதியா சட்டமன்றத் தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர். இவர் தேர்தல் செலவு கணக்குகளில் தவறான கணக்குகளை பதிவு செய்ததற்காக தேர்தல் கமிஷனர் இவரை 3 ஆண்டுகள் தகுதி நீக்கம் செய்துள்ளது.

OXFORD IAS ACADEMY

- ❖ சாகித்ய அகாடமி சார்பில் ஆண்டுதோறும் 35 வயதுக்குட்பட்ட எழுத்தாளர்களுக்கு யுவ புரஸ்கார் விருதும் குழந்தை இலக்கியத்திற்கான பால சாகித்ய புரஸ்கார் விருதும் வழங்கப்படுகிறது. தமிழ் மொழியில் இந்த ஆண்டுக்கான யுவ புரஸ்கார் விருது பெற கவிஞர் ஜே.ஜெயபாரதி (மனுஷி) எழுதிய ‘ஆதி காதலின் நினைவு குறிப்புகள்’’ கவிதை தொகுப்பு தேர்வாகியுள்ளது. பால சாகித்ய புரஸ்கார் விருது பெற குழந்தைகள் நாடக கவிஞர் வேலு சரவணன் தேர்வானார்.

- ❖ தமிழகத்தில் கிராமங்களை தத்தெடுக்கும் புதிய திட்டத்தை தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின் கீழ் கால்நடை வளர்ப்பில் பின் தங்கிய ஒரு கிராமத்தை தத்தெடுக்கின்றனர். அங்கு வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களை தேர்வு செய்து தரம் உயர்த்தப்பட்ட ‘கிராம பிரிமியர்’ என்ற வகை நாட்டுக்கோழிகள் 10 இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

- ❖ உலகின் முதல் தண்டவாளமற்ற இரயில் (railless train) சேவை சீனாவின் ஹீயான் மாகானத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. சீனாவிலுள்ள CRRC Zhuzhou Institute Co. Ltd என்ற நிறுவனம் தயாரித்துள்ள இந்த இரயிலானது 500 பயணிகளுடன் மணிக்கு 70 கி.மீ வேகத்தில் பயணிக்கும் திறன் கொண்டது.

- ❖ பாஸ்போட்டுக்கு விண்ணப்பிப்பவர்களில் 8 வயதுக்குக் கீழும் 60 வயதைத்தாண்டியவர்களுக்கும் 10 சதவீதம் கட்டண குறைப்பு செய்யப்படும் என மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் தெரிவித்துள்ளார். தற்போது ஆங்கிலத்தில் மட்டுமே பாஸ்போட்டில் சொந்த விவரங்கள் அச்சடிக்கப்படுகின்றன. இனிமேல் ஆங்கிலம் , இந்தி மொழியிலும் அச்சிடப்படும்.

- ❖ தமிழகத்தில் பிரபல மொழியியல் வல்லுநர்களில் ஒருவரான பன்மொழிப்புலவர் கா.அப்பாத்துறை பிறந்த தினம் - ஜுன் 24